<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

**OS** 26/2018

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 06ம் நாள் Dw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 06.10.2025

Dw1 ( ஈஸ்வர மூர்த்தி)

**குறுக்கு விசாரணை ( வாதி தரப்பில்)**

2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் எனது மகன் மற்றும் மகள் என்றால் சரி. என் மனைவி பெயர் செல்வி. தாவா சொத்து வீடு என்றால் சரிதான். தாவா வீட்டின் மீது பெருந்துறை ஆசிரியர் மற்றும் கல்வித் துறை அலுவலர் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தில் கடன் பெற்றிருந்தேன் என்றால் சரிதான். மேற்படி சங்கத்தில் ரூ.2,00,000/- கடன் பெற்றிருந்தேன். அதற்கு மேல் அந்த சொத்தின் மீது கடன் கொடுக்க சங்கத்தில் மறுத்துவிட்டனர் என்றால் சரிதான். அந்த கூட்டுறவு சங்கத்திற்கு நான் அடமானம் எழுதி கொடுத்தேன் என்றால சரிதான். அந்த அடமானத்தை நான், என் மனைவி, மகன் மற்றும் மகள் சேர்ந்து எழுதிக் கொடுத்துள்ளோம் என்றால் சரி. சொத்து எனக்கு மட்டும் பாத்தியதை இல்லை, என் மனைவி, மகன் மற்றும் மகள் அடமானத்தை எதற்காக கையொப்பம் செய்தோம் என்றால் கடன் சங்கத்தில் கேட்டதால் அனைவரும் கையொப்பம் செய்து கொடுத்தோம். என் பெயரில் சொத்து இருந்தாலும் அது பூர்வீக சொத்தா அல்லது தனிப்பட்ட சொத்தா என்று பிரச்சினை எழக்கூடாது என்பதற்காக சங்கத்தில் அனைவரிடமும் கையொப்பம் பெற்றுக் கொண்டனர் என்றால் சரிதான். நான் என் மகன் மற்றும் மகள் வாதியுடன் ஒரு விற்கிரய ஒப்பந்தம் செய்து கொண்டோம் என்றால் ஒப்பந்தம் செய்து கொண்டது உண்மை , ஆனால் சொத்தை விற்பனை செய்து கொடுப்பதற்காக இல்லை. அவ்வாறு நான் ஏற்படுத்திக் கொடுத்த ஒப்பந்தம் தான் வாசா ஆ 1 என்றால் ஆமாம். வாசாஆ 1 ல் விற்கிரய உடன்படிக்கை பத்திரம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ 1ல் உள்ள கையொப்பங்கள் என் மற்றும் எனது மக்களின் கையொப்பங்கள் என்றால் சரிதான்.

என் மனைவி அதில் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் ஆமாம்.

வாசாஆ 1 ஒப்பந்தத்தை சம்மதத்தின் பேரில் தான் எழுதிக் கொடுத்தோம் என்றால் சரிதான். எங்களை யாரும் மிரட்டவோ அடிக்கவோ இல்லை என்றால் ஆமாம். வேறு ஆவணங்கள் எழுதி பெறுவதாக சொல்லி வாசாஆ 1 பெறப்படவில்லை என்றால் சரிதான். வாசாஆ 1 ஆவணத்தை படித்துப் பார்த்து தான் கையொப்பம் செய்தோம் என்றால் நான் படிக்கவில்லை. நான் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தமிழ் எழுத படிக்கத் தெரியும். மின் வாரியத்தில் பணி செய்தேன். என் மகன் மற்றும் மகள் பட்டதாரிகள். நாங்கள் அனைவரும் படித்துப பார்த்து சம்மதித்து தான் கையொபப்பம் செய்தோம் என்றால் நம்பிக்கையின் பேரில் கையொப்பம் செய்தோம். நாங்கள் படித்துப பார்க்காமல் வாசாஆ 1 ல் கையொப்பம் செய்தோம் என்பதை எனது எதிர்வழக்குரையிலோ முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தற்போது பணி ஓய்வு பெற்று விட்டேன். வேறு எதுவும் வேலை செய்வதில்லை. வாசாஆ 1 எழுதிய பின் பதிவு செய்வதற்கு பத்திர பதிவு அலுவலகத்திற்கு சென்றோம் என்றால் சரிதான். சார் பதிவாளர் அலுவலகத்தில் சார் பதிவாளர் ஆவணங்கள் குறித்து கேட்டாரா என்றால் பெயர் மட்டும் கேட்டார் நாங்கள் கையொப்பம் செய்தோம். என்ன ஆவணம் பதிவு செய்ய வந்துள்ளீர்கள் என சார் பதிவாளர் கேட்டாரா என்றால் கேட்கவில்லை. சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவணம் பதிவு செய்வதற்கு முன்பு தரப்பினர்களை அழைத்து என்ன ஆவணம் அதிலுள்ள கையொப்பம் தரப்பினர்கள் தான் செய்தார்களா என்பதை உறுதி செய்த பின் தான் பதிவிற்கு பரிந்துரைப்பார் என்றும் நான் சார் பதிவாளர் ஆவணம் குறித்து கேட்கவில்லை என வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வாசாஆ 1 ன் அடிப்படையில் நான் ரூ.4,00,000/- முன் பணம் பெற்றுக் கொண்டேனா என்றால் இல்லை. சாட்சி முன்வந்து தான் தன் மகனின் படிப்பிற்கு வாதியிடம் பணம் வாங்கிய வகையில் ரூ.2,00,000/-மும் கடன் சங்கத்திற்கு ரூ.2,00,000/- வாதி செலுத்தியதாகவும் ஆக மொத்தம் ரூ.4,00,000/- என கூறுகிறார். கிரய ஒப்பந்தம் பதிவு செய்த அதே கால கட்டத்தில் நான் கூட்டுறவு சங்கத்திற்கு பணம் ரூ.2,00,000/- செலுத்தி தீர்த்ததற்கான ரசீதும் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ரூ.2,00,000/- செலுத்தி கடன் சங்கத்திற்கு செலுத்தப்பட்ட ரசீது பதிவிற்கு பின் நான் வாங்கினேன், என்னிடமிருந்து வாதி பெற்றுக் கொண்டார். கிரய ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டுள்ள ரூ.4,00,000/- ரொக்கம் எனக்கு செல்லாகிவிட்டது என்றால் சரிதான். ரசீதுதை கூட்டுறவு சங்கம்

நான் செலுத்த வேண்டிய கடனிற்கு எனக்கு வழங்கிய ரசீதாகும். அந்த ரசீது எனது பெயரடன் , எனது மனைவி, மகன், மகள் ஆகியோர் பெயரிலும் சேர்ந்து வழங்கப்பட்டது என்றால் சரி. ரசீதை நான் படித்துப் பார்க்கவில்லை. நான் என் மகனின் படிப்பிற்காக சிறுக சிறுக வாதியிடம் ரூ.2,00,000/- தொகை பெற்றதாகவும், கடன் சங்கத்திற்கு செலுத்த வேண்டிய தொகை ரூ.2,00,000/- என இன்று தான் முதன் முறையாக கூறுகிறேன் என்றும் எனது எதிர் வழக்குரையிலோ முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். ரசீதில் நான் பெற்ற கடன் ரூ.2,50,000/- என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் 2 லட்சம் சங்கத்தில் கடன் பெற்றதாக சொன்னது தவறு என்றால் சரிதான். எனக்கு கடன் சங்கத்தில் வழங்கிய ரசீது தான் என்னிடம் காண்பிக்கப்படுவது, அது **வாசாஆ 7.** விற்கிரயஒப்பந்தம், ரசீது ஆகியவை ஒரே சமயத்தில் எழுதப்பட்டு பதிவு செய்யப்பட்டது என்றால சரிதான். எம்.சி ஈஸ்வரமூர்த்தி, த,பெ சின்னதம்பி, 38/1 மடத்துப்பாளையம், ஓலப்பாளையம் போஸ்ட், பெருந்துறை தாலுக்கா என்பது எனது விலாசம் என்றால் சரிதாான். 05.02.2018 ல் வாதி எனக்கும் எனது மக்களுக்கும் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. வாதி தாவாவிற்கு முன்பு அறிவிப்பு அனுப்பினார் என்றும் என் மகன் மற்றும் மகள் வாங்க மறுத்துவிட்டனர் என்றும், நான் எவ்வித தகவலும் தெரிவிக்காமல் அந்த விலாசத்திலிருந்து நகர்ந்து விட்டதால் அறிவிப்பு சார்வாகமல் திருப்பப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. அந்த அறிவிப்பில் உள்ள சங்கதி தெரிந்து கொண்டு தான் அதை பெற்றுக் கொள்ளாமல் திருப்பி அனுப்பிவிட்டோம் என்றால் சரியல்ல. அசல் கிரய ஒப்பந்தம் மற்றும் ரசீதின் அசல் ஆகியவை வாதியின் வசம் ஒப்படைத்துவிட்டோம் என்றால் சரி, சொத்தின்அசல் பத்திரம் மேற்படி கிரய ஒப்பந்தம் ஏற்பட்ட தேதியில் கடன் சங்கத்தில் தான் இருந்தது, அது அப்போது எங்களுக்கு வழங்கவில்லை, பின்னிட்டு தான் வழங்கினார்கள். சொத்தின் அசல் ஆவணம் கடன் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் இருந்ததாலும் அதை தருவித்து தர கால தாமதம் ஏற்படும் என்பதால் கிரய ஒப்பந்த தேதியில் அசல் ஆவணம் வாதியின் வசம் ஒப்படைக்கப்படவில்லை என்றால் ஆமாம். வாதிக்கு பண வசதியுள்ளது என்றால் சரிதான். எத்தனை நாட்களில் அசல் ஆவணம் தலைமை கடன் சங்கத்தில் இருந்து வரும், எவ்வளவு நாட்களில் வாதிக்கு தருவதாக அப்போது சொல்ல முடியாது என்றால் சரிதான், சுமார் 1 மாதம் கழித்து

தான் நான் வாங்கினேன். அசல் பத்திரம் இருந்தால் தான் சொத்தை கிரயம் செய்து கொள்ள முடியும் என்றால் சரிதான். அதனால் தான் கிரய ஒப்பந்தத்திற்கு கிரய காலம் 1 வருடம் என நிர்ணயிக்கப்பட்டது என்றால் சரியல்ல. 1 மாதம் கழித்து எந்த தேதியில் கிரய பத்திரம் வந்தது என தேதி, மாதம், வருடம் சொல்ல முடியுமா என்றால் இல்லை. சுமார் 3 மாதம் கழித்து தான் சொத்தின் அசல் கிரய ஆவணத்தை பெற்று நான் வாதியிடம் ஒப்படைத்தேன் என்றால் சரியல்ல. எனக்கு சொத்தை விற்பனை செய்ய வேண்டும் என்ற எண்ணம் இல்லை என்றால் நான் எதற்காக 3 மாதம் கழித்து சொத்தின் அசல் ஆவணத்தை வாதியிடம் கொடுத்தேன் என்றால் வாதி கேட்டார் அதனால் நான் கொடுத்தேன். இந்த விவரத்தை நான் எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். என் மகனின் கல்வி கட்டணத்திற்காக வாதியிடம் சிறுக சிறுக எந்த தேதிகளில் எவ்வளவு கடன் பெற்றேன் என்ற விவரத்தை எனது எதிர்வழக்குரையிலோ முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திய பிறகு நான் வாதியை சென்று பார்த்தேனா என்றால் நான் சென்று பாக்கவில்லை, வாதியே மாதா மாதம் வட்டி வாங்க வருவார். இந்த விவரத்தை நான் எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது முதல் விசாரைணையில் என்ன விவரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் எத்தனை மாதம் வட்டி கொடுத்தேன் என்றால் 12 ஆண்டுகள் வட்டி கொடுத்துள்ளேன். எனது முதல் விசாரணையில் நான் வாதியிடம் பெற்ற தொகையை எப்போதும் கொடுக்க தயாராக உள்ளேன், இருப்பினும் என்னிடம் மாதம் ரூ.100 க்கு ரூ.5 வட்டி கேட்ட காரணத்தினால் என்னால் தர முடியாது என்று கூறிவிட்டேன் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விவரத்தை எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது எதிர்வழக்குரையில் குறிப்பிடாத சங்கதிகள் குறித்து எனது முதல் விசாரணையில் குறிப்பிடமுடியாது என்றும் அவ்வாறு குறிப்பிடும் சங்கதிகள் ஏற்றுக் கொள்ள கூடியதல்ல என்றால் சரியல்ல. நான் கடன் வாங்கியதாக சொல்லும் தொகையை எப்போதாவது அசல் மற்றும் வட்டி எடுத்துக் கொண்டு வாதியிடம் கொடுத்து அதை பெற்றுக் கொண்டு கிரய ஒப்பந்தத்தைரத்து செய்ய எப்போதாவது கேட்டுள்ளேனா என்றால் எப்போதும் கேட்கவில்லை. நான் கடன் செலுத்த தயாராக இருந்தேன் என்பது எந்த தேதி, மாதம், வருடம் என்றால் 2023 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18 ம் தேதி. 4 லட்சம் தொகையை எடுத்துச சென்றேன். நான் வாதியிடம்

வட்டி செலுத்தியதற்கு ரசீது எதுவும் பெறவில்லை. வாசாஆ 1 கிரயத்திற்காக தான் ஏற்படுத்திக கொடுக்கப்பட்ட ஆவணம் என்றும் கடனிற்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணமல்ல என்றால் சரியல்ல. நான் மாதாமாதம் வாதிக்கு வட்டி செலுத்தியதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. 2023ம் ஆண்டு நான் 4 லட்சம் பணம் கொடுக்க தயாராக இருந்தேன் என்ற விவரத்தை எனது முதல் விசாரணையிலோ எதிர்வழக்குரையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். 22.10.2018 ல் இந்த வழக்கை நான் ஒருதலைபட்சமாக தீர்மானிக்க விட்டுவிட்டேன் என்றால் சரிதான். 03.06.2019 அன்று வாதி நிறைவேற்று மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். 16.03.2022 ல் நிறைவேற்று மனுவிலும் ஒருதலைபட்சமாக்கப்பட்டேன் என்றால் சரிதான். 12.04.2024 ல் தான் ஒரு தலைபட்ச உத்தரவு நீக்குறவு செய்யப்பட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்தேன் என்றால சரிதான். வாசாஆ 1 கிரய ஒப்பந்த காலத்தில் எனக்கு வேறு கடன்கள் இருந்தன என்றால் சரிதான். ஒப்பந்தம் செய்த காலத்திலேயே கடனுறுதி சீட்டுக்களிலும் கையொப்பம் செய்ததாக சொல்லியுள்ளது உண்மையா என்றால் ஆமாம். 12.08.2016 ல் கடன் பெற்றேனா என்றால் ஆமாம், யாரிடம் பெற்றேன் என்றால் வாதியிடம் பெற்றேன். சுந்தரம் மகன் மகேந்திரன் என்பவரிடம் ரூ.3,50,000/- கடன் வாங்கி கொண்டு கடனுறுதி சீட்டு ஏற்படுத்திக கொடுத்தேன் என்றால் அவர் யார் என்றே எனக்கு தெரியாது. 23.09.2016 ல் ரூ.2,50,000/- கார்த்திகேயனிடம் கடன் பெற்றேனா என்றால் அவர் யார் என்றே எனக்கு தெரியாது. ஆர் மகேந்திரனிடம் 18.02.2017 ல் ரூ.3,00,000/- கடன் பெற்றேனா என்றால் அவரும் யார் என்றே தெரியாது. அந்த 3 நபர்களும் நீதிமன்றத்தில் வழக்கு போட்டார்களா என்றால் வழக்கு போட்டார்கள். அந்த வழக்குகள் இந்நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு தீர்ப்பாகியுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் ஆஜராகியுள்ள எனது வழக்கறிஞர் மேற்படி கடனுறுதி சீட்டின் அடிப்படையில் தொடரப்பட்ட 3 வழக்குகளிலும் என் சார்பாக ஆஜராகியுள்ளார் என்றால் ஆமாம். 3 வழக்குகளும் நிலுவையில் இருப்பதாக யார் சொன்னார்கள் என்றால் எனது வழக்கறிஞர் சொன்னார். கடனுறுதி சீட்டுகளில் எனது ரேகைகளும் உள்ளது என்றால் சரிதான். 3 கடனுறுதி சீட்டுகளையும் வாதிக்கு தான் கொடுத்ததாக கூறுகிறார். ஆர் கார்த்திகேயன் தொடர்ந்த வழக்கு அவ 51/2018 ல் நான் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் ஒருதலைபட்சமாக 29.11.2018 ல் தீர்ப்பாகியுள்ளது என்றால் சரியல்ல. ஆர்

மகேந்திரன் தொடர்ந்த அவ 52/2018 நான் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் 19.11.2018 அன்று தீர்ப்பாகியுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி கடனுறுதி சீட்டு கடன்களுக்கும் வாதிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் நான் பல நபர்களிடம் கடன் பெற்று அதற்காக எழுதி கொடுத்த கடனுறுதி சீட்டின் அடிப்படையில் வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாசாஆ 1 ன் படி நான், என் மகன், மகள் ஆகியோர்கள் சொத்தை கிரயம் செய்து கொடுப்பதற்காக கிரய தொகை பேசி அதன் அடிப்படையில் தான் வாதியிடம் பணம் பெற்றுக் கொண்டு கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தி அதை பதிவும் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பலமுறை கேட்டும் வாதிக்கு கிரயம் எழுதி கொடுக்க முன்வரவில்லை என்பதால் தான் வாதி இந்த வழககு தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. அறிவிப்பு பற்றி தெரிந்து கொண்ட பிறகும் நான் கிரயம் செய்து கொடுக்க முன்வரவில்லை என்றால் சரியல்ல. வாதியை ஏமாற்ற வேண்டி பொய்யான விவரங்களை சாட்சியமாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரியவாறு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. பாக்கி கிரயத் தெகை 50 ஆயிரத்தை வாதி நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளதை தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED
Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2025.10.06 18:44:42 +0800

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS